# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1907/22 - 2015 මාර්තු මස 25 වැනි බදාදා - 2015.03.25

*1907/22 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரச பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

*தேசிய அரச பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 39 (1) வாசகத்தின் கீழ் சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சரினால் வகுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நவீன் எரஞ்சன் திசாநாயக்க,
சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2015, மாச்சு 25.

சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சர் நவீன் எரஞ்சன் திசாநாயக்க ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 39 (1) வாசகத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2015, மே மாதம் 15 ஆந் திகதி வாக்கெடுப்பு நடாத்தி தேசிய சங்க உத்தியோகத்தர்களை நியமிக்கும் வரை கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுச் சங்கங்களின் உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு உரிய சங்கத்தின் எதிர்காலப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ காலத்தை மேற்கூறப்பட்ட திகதி வரை நீடிக்கிறேன்.

1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தினால் விதிக்கப்பட்ட 2013, சனவரி 15 ஆந் திகதிய மற்றும் 1793/3 ஆம் இலக்க அரச அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கங்களின் கட்டளைத் தொடருக்கமைய 2015, மாச்சு மாதம் 31 ஆந் திகதியளவில் உத்தியோகபூர்வ காலம் 2 வருடங்களைப் பூரணப்படுத்தும் சகல விளையாட்டுச் சங்கங்களுக்கான வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்.

இருப்பினும் தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் மற்றும் எதிர்ப்புக்கள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் அதற்கமைய மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக சுற்றுலா மற்றும் வியைாட்டுக்கள் அமைச்சர் என்ற வகையில் எனக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக சட்டமா அதிபரின் சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளதுடன் அவ் ஆலோசனைகளுக்கமைய அதற்குரியதாகவுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலில் 13 (1) மற்றும் 13 (2) இல் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தேசிய சங்கம் அல்லது சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், உதவிச் செயலாளர், உதவிப் பொருளாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ள ஒருவர் அப்பதவிக்காக மீள நியமனம் பெறுவதாயின் அவரது மொத்தச் சேவைக்காலம் 04 வருடங்களைத் தாண்டாது இருக்க வேண்டியதுடன், அது 1793/3 ஆம் இலக்க வியைாட்டு சங்கக் கட்டளைத் தொடரை விதிப்பதற்கு முன்னர் அல்லது பின்னர் பதவி வகித்த மொத்தச் சேவைக் காலமாக இருக்க வேண்டும். அத்துடன் 04 வருட சேவைக்காலத்தைத் தாண்டியுள்ள எந்தவொரு நபருக்கும் அப்பதவிக்காக மீள் பதவி வகிப்பதற்கு முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட தெளிவுப்படுத்தல்களுக்குரியதாக 2015 தேசிய விளையாட்டுச் சங்க வாக்கெடுப்பின் போது வேட்புமனு ஏற்கப்படுவதுடன் நியமனம் பெறவுள்ள பதவிகளுக்குரியதாக எதிர்வரும் 2 வருட காலத்தை உள்ளடக்கி மொத்த சேவைக்காலம் 04 ஆண்டுகளைத் தாண்டாத சகல நபர்களுக்கும் வேட்பு மனுவை சமர்ப்பிக்க முடியும் எனத் தயவாய் அறியத்தருகிறேன். என்னால் 2015 வாக்கெடுப்பிற்காக 13 (2) இன் கீழ் இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரங்களை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

இதற்கமைய 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம் மற்றும் 2013, சனவரி மாதம் 15 ஆந் திகதிய மற்றும் 1793/3 ஆம் இலக்க, அரச விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கக் கட்டளைத் தொடருக்கமைய மீள வேட்பு மனுக்கோரி 2015, மே மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் வாக்கெடுப்பு நடைபெறும் என அறிவிக்கிறேன்.

**அட்டவணை**

1. பூப்பந்து
2. நீர் விளையாட்டு
3. உடற்பயிற்சி
4. துவிச்சக்கரவண்டி
5. ரைபல்
6. ஹொக்கி
7. படகு ஓட்டம்
8. றக்பி காற்பந்து
9. பழுதூக்கல்
10. ஜிம்னாஸ்ரிக்
11. கொல்ப்
12. மல்யுத்தம்
13. மோட்டார் வண்டி விளையாட்டு
14. கூடைப்பந்து
15. மெய்வல்லுனர் விளையாட்டு
16. டெனிஸ்
17. பிரிஜ்
18. கரம்
19. உயிர்காப்பு
20. குத்துச்சண்டை
21. ஜூடோ
22. பிலியட் மற்றும் ஸ்நூகர்
23. காற்பந்து
24. எல்லே
25. செஸ்
26. படகு ஓட்டம்
27. மேசைப் பந்து
28. ஸ்கொஸ்
29. டைகொண்டோ
30. மென்பந்துக் கிரிக்கெட்
31. பாரம் தூக்கல்
32. கபடி
33. மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு
34. மோட்டார் சைக்கிள் போட்டி
35. பேஸ் போல்
36. வுசு
37. துரோ போல்
38. ஈட்டி எறிதல்
39. குதிரைப் பந்தயம்
40. சம்பிரதாய கராத்தே
41. கைப் பந்து
42. கயிறு இழுத்தல்
43. குறிபார்த்து சுடல்
44. வாள் வீச்சு

4- 312

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.